**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**
**2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 24 ஆம் நாள் புதன் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 10 ம் நாள்)**

**அசல் வழக்கு எண்.104/2015**

(CNR.No.TNTS07-000188-2015)

********

முத்தம்மாள் … வாதி

/எதிர்/

1. முருகேஸ்வரி
2. வைத்திலிங்க நாடார்
3. காசி நாடார்
4. ராமசாமி நாடார் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 27.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எஸ்.முருகேசன் மற்றும் எஸ்.எம்.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.எம்.இரமேஸ்வரன் மற்றும் ஆர்.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

(i) எனவே இந்த வழக்கானது 1வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/2 பங்கு பாத்தையும், 2 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/4 பங்கு பாகத்தையும், 3 வது, 4 வது தபசில்

சொத்தில் வாதிக்குரிய 1/8 பங்கு பாகத்தையும் பிரித்து சுவாதீனம் ஒப்படைக்க கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **<u>பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கை</u>** தபசில் சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் அதன் தொடர்ச்சியாக சொத்தின் சுவாதீனத்தை 1ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைக்க கோரியும், மேலும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் படி சொத்துக்களை பிரதிவாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை வாதி எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்கோரிக்கை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி சுப்பையா நாடாரின் குமாரரான கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி ஆவார். 2 முதல் 4 பிரதிவாதிகள் வாதியின் கணவருடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். 1ஆம் பிரதிவாதி வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் அவரது முதல் மனைவி பஞ்சவர்ணத்திற்கும் பிறந்த மகள் ஆவார். வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் இந்த 1ஆம் பிரதிவாதிக்கு 2 வயதாக இருக்கும்பொழுது அவரது கணவரையும் 1ஆம் பிரதிவாதியையும் விட்டுவிட்டு அருணாச்சலம் என்பவரை திருமணம் செய்து கொண்டு கொடைக்கானலில் வாழ்ந்து வருகிறார். மேற்படி பஞ்சவர்ணம் 2வது திருமணம் செய்து கொண்டதன் காரணமாக பஞ்சவர்ணத்திற்கு 2 குழந்தைகள் பிறந்துள்ளனர். அதன் பின்னர் பஞ்சவர்ணம், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் நிரந்தரமாக பிரிந்து வேறு நபருடன் குடும்பம் நடத்தி வருவதால் தற்போது பஞ்சவர்ணம், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டார். அதன் பிறகு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் வாதியை கடந்த 06.06.1998 ஆம் தேதி 2வது திருமணம் செய்து கொண்டார். மேற்படி திருமணத்திற்கு பின்னிட்டு வாதியும் கோபால்

என்ற கோபால கிருஷ்ண நாடாரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்து வந்தனர். மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் கடந்த 22.05.2014 ஆம் தேதியன்று இறக்கும் வரையில் வாதி அவரது கணவருக்கு பாத்தியப்பட்ட இடத்திலேயே வசித்து வந்தார். மேலும் வாதியும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரும் சேர்ந்து வாழ்ந்து வந்ததை காட்டும் வகையில் வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அடையாள அட்டை ஆகியவை மேற்படி முகவரியிலேயே இருந்து வருகிறது. இறந்துபோன கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு மனைவி என்ற முறையில் வாதியும், மகள் என்ற முறையில் 1 ஆம் பிரதிவாதியும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள்.

2.2. தபசில் சொத்துக்கள் சேர்ந்தமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது. 1 வது தபசில் சொத்து வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 2 வது தபசில் சொத்து வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், 4 ம் பிரதிவாதிக்கும் 01.02.1999 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். 3 வது தபசில் சொத்தில் 1, 3, 4, 5 அயிட்ட சொத்துக்கள் மேற்படி கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் 23.04.1983 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். 4 வது தபசில் சொத்து வாதியின் கணவரான கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான சுப்பையா நாடாருக்கு 13.11.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும்.

2.3. 1 வது தபசில் சொத்து வாதியின் கணவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் வாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் பாதி பங்கு உரிமையுள்ளது. 2 வது தபசில் சொத்து வாதியின் கணவருக்கும் 4 ஆம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்பதால் வாதியின் கணவர் இறந்த பிறகு வாதி, 1 பிரதிவாதி, 4 ம் பிரதிவாதி 2 வது தபசில்

சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தனர். மேற்படி 2 வது தபசில் சொத்தில் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/4 பங்கும், 4 ம் பிரதிவாதிக்கு பாதி பங்கும் உரிமையுள்ளது. மேலும் 3 வது தபசில் சொத்து வாதியின் கணவர் மற்றும் அவரது சகோதரர்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வாதியின் கணவர் இறந்த பிறகு வாதியும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். மேற்படி3 வது தபசில் சொத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/8 பங்கு உரிமையுள்ளது.

2.4. 4 வது தபசில் சொத்து வாதியின் கணவரின் தந்தை சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அவரது இறப்பிற்கு பின்னிட்டு குடும்ப ஏற்பாட்டின் படி சுப்பையா நாடாரின் 2 மகள்களும் தங்களுக்குரிய பாகத்தை வாதியின் கணவருக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டனர். தபசில் சொத்துக்களில் தற்போது வாதியின் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு வாதியும், பிரதிவாதிகளும் தபசில் சொத்தில் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். எனவே மேற்படி 4 வது தபசில் சொத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/4 பங்கு பாகம் உரிமையுள்ளது.

2.5. தற்போது பிரதிவாதிகள் சேர்ந்து கொண்டு கடந்த 01.10.2014 முதல் தபசில் சொத்துக்களில் வில்லங்க பாராதீனம் செய்யப்போவதாக கூறி வருகின்றனர். வாதி, பிரதிவாதிகளிடம் வாதிக்குரிய பாகத்தை பிரித்து தருமாறு கேட்டு கடந்த 18.11.2014 ஆம் தேதியன்று அறிவிப்பு அனுப்பினார். ஆனால் மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. எனவே இந்த வழக்கானது 1வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/2 பங்கு பாத்தையும், 2 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/4 பங்கு பாகத்தையும், 3 வது, 4 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/8 பங்கு பாகத்தையும் பிரித்து சுவாதீனம் ஒப்படைக்க கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கையின் சுருக்கம் (Counter Claim)**

வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானது. வாதி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி என்று சொல்லப்பட்டுள்ள சங்கதி மறுக்கப்படுகின்றது. 1 ஆம் பிரதிவாதியின் தந்தையான கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் பஞ்சவர்ணம் என்பவரை மட்டுமே திருமணம் செய்து மேற்படியார் நாளது தேதி வரையில் மனைவி என்ற அந்தஸ்திலேயே உள்ளார் மற்றும் அவர்களது திருமண உறவு நாளது தேதி வரையில் அமலில் உள்ளது. மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் 1 ஆம் பிரதிவாதியின் தாயாரான பஞ்சவர்ணத்தை வாரிசாக விட்டுவிட்டு கடந்த 22.05.2014 இல் இறந்துபோனார். இந்த வாதி சிந்தாமணி கிராமத்தை சேர்ந்த ஆரோக்கியம் என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு இராஜா, பிரபாகரன் ஆகிய இரண்டு ஆண் மகன்கள் உள்ளனர். வாதி 2004 ஆம் வருடம் தை மாத வாக்கில் பிரதிவாதிகளின் குடும்பத்தை அனுகி தபசில் சொத்தில் வாடகைக்கு குடியிருக்க கேட்டதில் மாத வாடகை ரூ.200/- தர கேட்டு குடியிருக்க அனுமதிக்கப்பட்டார். கடந்த 22.05.2014 ல் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் இறந்ததற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடைசியில் வாதியை தாவா சொத்தில் இருந்து காலி செய்ய கேட்டபோது வாதி அவகாசம் கேட்டார். ஆனால் அதன் பின்னிட்டு மோசடியான சங்கதிகளை கூறி 18.11.2014 அன்று வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார். அதன் பின்னர் வாதியை வீட்டை காலி செய்து கொடுக்குமாறு கேட்டபோது வாதி தற்போது வரை வீட்டினை காலி செய்து கொடுக்காமல் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எனவே வாதியை வீட்டை காலி செய்ய வேண்டி இந்த எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2. வழக்குரையில் கண்டுள்ள சொத்துக்கள் பிரதிவாதிகளின் பொது குடும்ப பூர்வீக சொத்துக்களிலிருந்து வாங்கப்பட்ட பூர்வீக சொத்துக்களாகும். அதனை 13.10.2014 ஆம் தேதியன்று பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் பிரதிவாதிகள் பிரிவினை செய்து கொண்டு அனுபவம் செய்து வருகிறார்கள். அதன் படி தாவா எதிரிடை கோரிக்கை சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது. வாதிக்கும் தபசில் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது.

எனவே வாதி கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மேலும் வாதியின் வழக்கு அவசியமான கட்சி சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகியுள்ளது.

3.3. வாதி வாடகைதாரர் நிலையில் குடியிருந்துகொண்டு தவறான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதி தாவா சொத்தில் வாடகைதாரர் நிலையில் குடியிருக்கும் தகுதியினை இழந்துவிட்டார். எனவே வாதியை தாவா சொத்தில் இருந்து காலி செய்யவேண்டி இந்த எதிரிடை கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்குரையில் கண்ட சொத்துக்கள் பிரதிவாதிகளின் பொதுக்குடும்ப பூர்வீக சொத்தின் வருமானத்திலிருந்து வந்த வருமானத்தினை கொண்டு பல்வேறு காலங்களில் வாங்கப்பட்ட சொத்தும், பூர்வீக சொத்தும் ஆகும். இதை பிரதிவாதிகள் 13.10.2014 ஆம் வருட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பிரிவினை செய்து அனுபவித்து வருகிறார்கள். இதன்படி தாவா எதிரிடை கோரிக்கை சொத்து 1ம் பிரதிவாதிக்கு கிடைத்து உரிமையாளராக உள்ளார். வழக்குரையின் இதர சொத்துக்களை பாகப்பிரிவினை ஆவண சொத்து விபரப்படி பிரதிவாதிகள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள். வாதிக்கும், வழக்குரை சொத்திற்கும், பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. வாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு பெற சட்டப்படியான தகுதி இல்லை. எனவே தபசில் சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் அதன் தொடர்ச்சியாக சொத்தின் சுவாதீனத்தை 1ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைக்க கோரியும், மேலும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் படி சொத்துக்களை பிரதிவாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை வாதி எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்கோரிக்கை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>வாதி தரப்பு பதிலுரையின் சுருக்கம்</u>**

எதிர்கோரிக்கை சங்கதிகள் தவறானவை. பிராது தபசில் சொத்தை பிரதிவாதிகள் 13.10.2014 ம் வருட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பிரிவினை செய்து அனுபவித்து

வருகிறார்கள் என்று பிரதிவாதிகள் எதிர்கோரிக்கையில் சொல்லியிருப்பது உண்மையில்லை. பிராது தபசில் சொத்துக்கள் நாளது தேதிவரை பிரிவினை செய்யப்படாமல் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பொது அனுபவத்திலேயே இருந்து வருகிறது. தாவா எதிரிடை கோரிக்கை சொத்தான பிராது 4ம் தபசில், 5ம் அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதிக்கு கிடைத்து உரிமையாளராக உள்ளார் என்றும், பிராதின் இதர சொத்துக்களை பாகப்பிரிவினை ஆவண சொத்து விபரப்படி பிரதிவாதிகள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்த வாதிக்கும், பிராது சொத்துக்கும், பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு பெற சட்டப்படியான தகுதி இல்லை என்றும், வாதி கூறும் உறவுமுறை சட்டவிரோதமானது என்றும், வாதி வழக்கு அவசிய சட்சி சேர்க்காத குறைக்கு உள்ளாகியுள்ளது என்றும், பிரதிவாதிகள் எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையில்லை. பிரதிவாதிகள் எதிர்கோரிக்கையில் குறிப்பிடும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் பிரதிவாதிகளால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல. மேற்படி 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் மோசடியானது என்பதால் பிராது தபசில் சொத்துக்களில் வாதிக்குரிய சட்டப்படியான பங்குபாக விகிதத்தை பொருத்து அது கட்டுப்படுத்தாது. பிராது தபசில் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பொது அனுபவத்தில் இருந்து வருவதால் பிராது 4ம் தபசில் 5ம் அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள தபிசல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரமோ, சுவாதீன பரிகாரமோ 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதில்லை. அதேபோல் பிரதிவாதிகள் எதிர்கோரிக்கையில் குறிப்பிடும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் பிரதிவாதிகள் கோரும் தடையாணை பரிகாரமோ, வேறு எந்த பரிகாரமோ பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதில்லை.

5. இவ்வழக்கில், வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கின் தீர்வுக்காக கடந்த **19.08.2017** அன்று கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| 1. | Whether it is true that the plaintiff is entitled to 1/2 undivided share in the first schedule of property? |
| 2. | Whether it is true that the plaintiff is entitled to 1/4 undivided share in the 2nd schedule of property? |
| 3. | Whether it is true that the plaintiff is entitled to 1/8 undivided share in the 3rd and 4th schedule of properties? |
| 4. | Whether the plaintiff is entitled to the relief of preliminary decree for partition as prayed for? |
| 5. | Whether the plaintiff is entitled to the relief of mesne profit as prayed for? |
| 6. | To what other relief, the plaintiff is entitled to? |

6. இன்று இவ்வழக்கானது தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கில், வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை ஆகியவைகளை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் மேற்கண்ட எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| 1. | கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் |

| | |
|---|---|
| | மனைவி பஞ்சவர்ணம் என்பவர் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டாரா? |
| 2. | வாதிக்கும் அவரது முதல் கணவர் ஆரோக்கியத்திற்கும் இடையேயான திருமணம் நடைமுறையில் இல்லை என்பது சரியா? |
| 3. | வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் கடந்த 06.06.1998 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்பது உண்மையா? ஆம் எனில் அது சட்டப்படி செல்லத்தக்க திருமணமா? |
| 4. | வாதியின் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா? |
| 5. | வாதிக்கு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி என்ற முறையில் தபசில் சொத்துக்களில் பாகம் கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் தபசில் சொத்துக்களில் வாதிக்கு கிடைக்கத்தக்க பாகம் எவ்வளவு? |
| 6. | பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதா? |
| 7. | எதிர்கோரிக்கை தபசில் சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதா? |
| 8. | 1 ஆம் பிரதிவாதிக்கு எதிர்கோரிக்கை தபசில் சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 9. | எதிர்கோரிக்கைதாரர்கள்/பிரதிவாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 10. | வேறு பரிகாரங்கள் என்ன? |

7. இவ்வழக்கில் வாதி தரப்பில், முதலில் வாதி முத்தம்மாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக ரவீந்திரன் என்பவர் வா.சா.2 ஆக

விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக குட்டிராஜா என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக மாரியப்பன் என்பவர் வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக ஆவுடைக்கோமதி என்பவர் வா.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக சாமிக்காளை என்பவர் வா.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக சந்தியாகப்பன் என்பவர் வா.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக பாப்பம்மாள் என்பவர் வா.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக செல்வி என்பவர் வா.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் தனிநபர் சாட்சியாக இசக்கிராஜ் என்பவர் வா.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.28 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 3 ம் பிரதிவாதி காசி நாடார் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் வாதி தரப்பில் பி.வா.சா.1 குறுக்குவிசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.29 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. **வாதி தரப்பு வாதம்,**

கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் ஆவார் என்றும். மேற்படி பஞ்சவர்ணம் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை விட்டுவிட்டு

ராஜீ என்பவரை 2 வதாக திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு 2 குழந்தைகள் இருந்து வருகிறது. பஞ்சவர்ணம் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை பிரிந்து வாழ்ந்து வருவதால் இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசாக மாட்டார் என்றும், மேலும் வாதிக்கு ஆரோக்கியம் என்பவருடன் திருமணம் நடைபெற்றது என்றும், பின்னர் ஆரோக்கியம் இறந்தற்கு பின்னிட்டு 1998 ஆம் ஆண்டு வாதி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை திருமணம் செய்து கொண்டார் என்றும், வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் நடைபெற்ற திருமணம் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 முதல் வா.சா.10 வரையிலான சாட்சியங்கள் மூலமும், வாதி தரப்பு சான்றாவணங்களின் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதால் 2014 ஆம் ஆண்டு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் இறப்பிற்கு பின்னிட்டு வாதியும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணத்திற்கும் பிறந்த 1 ஆம் பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் ஆவார்கள் என்றும், எனவே கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் சொத்தில் வாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் சம பங்கு உரிமையுள்ளது என்றும், எனவே கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு பாத்தியப்பட்ட 1 வது தபசில் சொத்தில் வாதிக்கு 1/2 பங்கு பாகமும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், 4 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட 2 வது தபசில் சொத்தில் வாதிக்கு 1/4 பங்கு பாகமும், மேலும் வாதியின் கணவருக்கும் அவரது சகோதரர்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட 3 வது தபசில் சொத்தில் வாதிக்கு 1/8 பங்கு பாகமும், மேலும் வாதியின் கணவரின் தந்தை சுப்பையா நாடார் இறந்ததற்கு பின்னிட்டு அவருக்கு பாத்தியப்பட்ட 4 வது தபசில் சொத்துக்கள் வாதியின் கணவருக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதால் 4 வது தபசில் சொத்தில் வாதிக்கு 1/8 பங்கும் கிடைக்கத்தக்கது என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் தரப்பில் Chowdamma (D) by LR and Another Vs Venkatappa (D) by Lrs and Another, Civil Appeal No.11330 of 2011 மற்றும் Smt.Shiramabai W/o Pundalik, Bhave and others Vs The Captain, Record Officer, For O.I.C. Records, Sena Corps Abhilekh, Gaya, Bihar State and Another Civil Appeal No.5262/2023 ஆகிய

மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்புகளும் மற்றும் Malliga (Died) and 4 others Vs S.Shanmugam (Died) and others, A.S.No.696/2017 dated 13.11.2024 எனும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பும் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

9. **பிரதிவாதிகள் தரப்பு வாதம்**

வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும், வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.1 முதல் வா.சா.10 வரையிலான சாட்சிகள் மற்றும் வாதி தரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது இந்த வழக்கில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் அவரது முதல் மனைவி பஞ்சவர்ணத்திற்கும் நடைபெற்ற திருமணம் சட்டப்படி விவாகரத்து செய்யப்படவில்லை என்றும், எனவே வாதிக்கு, கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருடன் திருமணம் நடைபெற்றதாக எடுத்துக்கொண்டாலும் கூட கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் திருமணம் விவாகரத்து ஏற்படாத நிலையில் வாதியுடன் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் 2 வது திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் வாதிக்கு, ஆரோக்கியம் என்பவருடன் திருமணம் நடைபெற்று 2 மகன்கள் உள்ளனர் என்று ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும், ஆரோக்கியம் தற்போது இறந்துவிட்டார் என்று இறப்பு சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஊரக வளர்ச்சித்துரை அட்டை முதலிய ஆவணங்கள் மோசடியான ஆவணமாகும் என்றும், மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என அனுமானிக்க முடியாது என்றும், எனவே கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், வாதிக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும், வாதி இறந்துபோன கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசாக

கருதப்படமாட்டார் என்றும், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், மேலும் பிராது தபசில் சொத்தினை கடந்த 13.10.2014 ஆம் தேதியன்று பாகப்பிரிவினை செய்து கொண்டதில் எதிர்கோரிக்கை பரிகாரத்தில் கண்டுள்ள 1வது தபசில் சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், மேலும் 13.10.2014 ஆம் தேதிய பாக விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதை வாதி இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் வழங்கவேண்டியது அவசியமாக உள்ளது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. **<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்.1 முதல் 6 க்கான தீர்வு:</u>**

(i) இந்த வழக்கானது 1 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/2 பங்கு பாத்தையும், 2 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/4 பங்கு பாகத்தையும், 3 வது, 4 வது தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/8 பங்கு பாகத்தையும் பிரித்து சுவாதீனம் ஒப்படைக்க கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **<u>பிரதிவாதிகள் தரப்பு எதிர்கோரிக்கை</u>**: எதிர்கோரிக்கை தபசில் சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் அதன் தொடர்ச்சியாக சொத்தின் சுவாதீனத்தை 1ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைக்க கோரியும், மேலும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் படி சொத்துக்களை பிரதிவாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை வாதி எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்கோரிக்கை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10.2. வாதி தரப்பு வழக்கு யாதெனில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் பஞ்சவர்ணம் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்பதும், மேற்படியார்களுக்கு 1ஆம் பிரதிவாதி வாரிசாக பிறந்ததற்கு பின்னிட்டு பஞ்சவர்ணம் ராஜீ என்பவரை 2 வது திருமணம் செய்து கொண்டு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை விட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்பதும்,

அதன் பின்னிட்டு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் வாதியை கடந்த 06.06.1998 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார் என்பதும், மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் கடந்த 2014 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதும், அவருக்கு வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் ஆவார்கள் என்பதும், எனவே கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசுகள் என்ற முறையில் அவருக்கு பாத்தியம் உள்ள சொத்துக்களில் வாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் சம பங்கு உரிமையுள்ளது என்பதும் வாதி தரப்பு வழக்காகும்.

10.3. பிரதிவாதிகள் தரப்பு வழக்கு யாதெனில், வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்பதும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், பஞ்சவர்ணம் என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு 1 ஆம் பிரதிவாதி வாரிசாக பிறந்துள்ளார் என்பதும், மேற்படி திருமணம் நாளது தேதி வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதும், மேலும் வாதி ஆரோக்கியம் என்பவரை முதல் திருமணம் செய்து கொண்டு 2 ஆண் மகன்கள் உள்ளார்கள் என்பதும், வாதியின் முதல் கணவர் ஆரோக்கியம் இறந்துவிட்டார் என்பது நிரூபிக்கப்படவில்லை என்பதும், எனவே வாதி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசாக மாட்டார் என்பதும், எனவே வாதிக்கு கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசு என்ற முறையில் சொத்துக்களில் உரிமை கோர எவ்வித உரிமையும் கிடையாது என்பதும் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினையின்படி எதிர்கோரிக்கை தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கும், இதர தபசில் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கும் கிடைக்கப்பெற்று அனுபவம் செய்து வருகின்றனர் என்பதும் ஆகும்.

10.4. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்குரை மற்றும் எதிர்கோரிக்கை மற்றும் சாட்சியங்களின் பரிசீலனையிலிருந்து வாதி ஆரோக்கியம் என்பவரை முதலாவதாக திருமணம் செய்து கொண்டார் என்பதும், அவர்களுக்கு 2 மகன்கள் உள்ளார்கள் என்பதும், மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் பஞ்சவர்ணம் என்பவரை முதல் திருமணம் செய்து கொண்டார் என்பதும், மேற்படியார்களுக்கு 1 ஆம் பிரதிவாதி வாரிசுதாரர் ஆவார் என்பதும், மேலும் இந்த

வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் மேற்படி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் சகோதரர்கள் ஆவார்கள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகள் ஆகும்.

10.5. தற்போது இந்த வழக்கில் முக்கியமாக தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டாரா என்பதும், வாதிக்கும், ஆரோக்கியம் என்பவருக்கும் இடையே நடைபெற்ற திருமணம், வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் நடைபெற்ற திருமணத்தின்போது நடைமுறையில் இல்லையா என்பதும் மற்றும் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளதுபோல கடந்த 1998 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்பது உண்மையா? என்பதும் ஆகும்.

10.6. **<u>எழுவினா.1 க்கான தீர்வு</u>**

பஞ்சவர்ணம், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டாரா? என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், மேற்படி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், பஞ்சவர்ணம் என்பவருக்கும் நடைபெற்ற திருமணம் முறைப்படி நீதிமன்றம் மூலமாக விவாகரத்து செய்யப்படவில்லை என்பது வாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மாறாக வாதி தரப்பில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவியான பஞ்சவர்ணம் அவரை விட்டுவிட்டு அருணாச்சலம் என்ற ராஜீ என்பவரை 2 வதாக திருமணம் செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் வாதி தரப்பில் மேற்படி பஞ்சவர்ணத்திற்கு இரண்டாவதாக எப்போது திருமணம் நடைபெற்றது, எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்பதாக எவ்வித சங்கதிகளும் சொல்லப்படவில்லை.

10.7. மேலும் பஞ்சவர்ணம் என்பவர் உயிருடன் இருக்கும் நிலையில் பஞ்சவர்ணம் இரண்டாவதாக ராஜீ என்பவரை திருமணம் செய்துகொண்டதன் காரணத்தினால் அவர் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வாரிசாகமாட்டார் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில்

மேற்படி பஞ்சவர்ணம் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு அவருக்கு எதிரான சங்கதிகளை பொருத்து விளக்கம் அளிக்க போதிய வாய்ப்பு அளித்த பின்னரே, மேற்படி பஞ்சவர்ணம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டாரா என்ற சங்கதியை பொருத்து முடிவு செய்ய இயலும். எனவே மேற்படி பஞ்சவர்ணம் மேற்படி பிரச்சனையை பொருத்து தீர்மானிக்க அவசியமான தரப்பினர் ஆவார். எனவே இந்த வழக்கில் பஞ்சவர்ணம் தரப்பினராக சேர்க்கப்படாததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பஞ்சவர்ணம் இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டதன் காரணமாக பஞ்சவர்ணம் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டார் என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.8. **<u>எழுவினா.2 க்கான தீர்வு</u>**

வாதிக்கும், ஆரோக்கியம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது என்றும், வாதியின் முதல் கணவர் ஆரோக்கியம் இறந்துபோய்விட்டார் என்றும், அதன் பின்னரே கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை திருமணம் செய்துகொண்டார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் வாதியின் முதல் கணவர் ஆரோக்கியம் எப்போது இறந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் அவரது இறப்பு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வாதி, கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை திருமணம் செய்துகொள்ளும்போது வாதியின் முதல் கணவர் இறந்துவிட்டார் என்பது உரிய ஆவணங்களின் மூலம் நிரூபிக்கப்படாத நிலையில் வாதி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருடன் செய்துகொண்ட திருமணத்தின்போது வாதியின் முதல் திருமணம் நடைமுறையில் இல்லை என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.9. **<u>எழுவினா.3 க்கான தீர்வு</u>**

வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றதா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் கடந்த 06.06.1998 ஆம் வருடம் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், வாதியை திருமணம் செய்து கொண்டார் என்பதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி திருமணம் எங்கு வைத்து யார் முன்னிலையில் நடைபெற்றது என்பதாக எவ்வித சங்கதிகளும் சொல்லப்படவில்லை. வாதி தரப்பில் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றதாக நிரூபிக்கும் பொருட்டு வாதியே வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தும், மற்றும் வாதி தரப்பில் வா.சா..2 முதல் வா.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

10.10. மேற்படி சாட்சியங்களில் வா.சா.2 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் தனது முதல்விசாரணையில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவியான பஞ்சவர்ணம், ராஜீ என்பவரை 2 வதாக திருமணம் செய்து கொண்டு கொடைக்கானலில் வாழ்ந்து வருகிறார் என்றும் திருமலாபுரத்தில் வைத்து வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வா.சா.2 தனது குறுக்குவிசாரணையில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், பஞ்சவர்ணம் என்பவருக்கும் விவாகரத்து ஆகவில்லை என்றும், வாதியின் முதல் கணவர் ஆரோக்கியம் பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி வா.சா.2 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் வா.சா.2, வாதிக்கும் ஆரோக்கியம் என்பவருக்கும் ஏற்கனவே திருமணம் நடைபெற்றதா என்பதை பற்றிய எந்த விபரமும் தெரியாது என்றும், திருமணத்தின்போது ஊர் வழக்கப்படி ஊர் காசு வசூலிக்கப்படவில்லை என சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து அவர் வாதி மற்றும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின்

திருமணத்திற்கு சென்றதாக அளித்துள்ள சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.11. அடுத்ததாக வா.சா.3 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் தனது முதல் விசாரணையில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், வாதியை கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வீட்டில் வைத்து வாதியை திருமணம் செய்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ள போதிலும் அவர் தனது குறுக்குவிசாரணையில் வாதியின் முந்தைய வாழ்க்கை பற்றியும், அவருக்கு யாருடன் திருமணம் செய்யப்பட்டது என்பது பற்றியும் நேரிடையாக தெரியாது என்றும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், பஞ்சவர்ணத்திற்கும் விவாகரத்து பெறப்பட்டதா என்பது குறித்தும் தெரியாது என்றும், மேலும் திருமணம் நடைபெற்றால் ஊர் காசு வசூலித்து பதிவேடு பராமரிக்கப்படும் என்றும், ஆனால் வாதி மற்றும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் திருமணத்திற்கு ஊர் காசு வசூலிக்கப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.12. அடுத்ததாக, வா.சா.4 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், வாதியை கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வீட்டில் வைத்து வாதியை திருமணம் செய்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ள போதிலும், வா.சா.4 தனது குறுக்குவிசாரணையில் வாதியின் முந்தைய வழக்கை பற்றி தனக்கு தெரியாது என்றும், பஞ்சவர்ணத்திற்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் நீதிமன்றம் மூலம் விவாகரத்து ஆகவில்லை என்றும், வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு தான் போகவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படியாரின் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும், கோபால் என்ற

கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.13. மேலும் வா.சா.5 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், வாதியை கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வீட்டில் வைத்து வாதியை திருமணம் செய்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ள போதிலும், வா.சா.5 தனது குறுக்குவிசாரணையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த விபரம் குறித்து வழக்கறிஞரிடம் எதுவும் கூறவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி வா.சா.5 ன் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.14. வா.சா.6 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார், வாதியை கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் வீட்டில் வைத்து வாதியை திருமணம் செய்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ள போதிலும், வா.சா.6 தனது குறுக்குவிசாரணையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு யாரிடமும் விபரங்கள் கூறி மனு அளிக்கவில்லை என்றும், மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு, பஞ்சவர்ணத்துடன் நடைபெற்ற திருமணம் நீதிமன்றம் மூலம் விவாகரத்து ஆனதா என்பது பற்றியும், அவர்கள் திருமண விபரம் என்ன ஆனது என்பது பற்றி தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.6 ன் வீடு வாதியின் பக்கத்து வீடாக இருந்தாலும் வாதியின் முந்தைய திருமணம் என்ன ஆனது என்பது குறித்து தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும் முதல் விசாரணைக்கு விபரங்கள் தான் கூறவில்லை என கூறியுள்ளதிலிருந்து அவரது சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லையென இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.15. மேலும் வா.சா.7 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் வாதியின் திருமணத்தை தான் முன்னின்று நடத்தவில்லை என்றும், வாதியின் திருமணத்திற்கு தான் செல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. வா.சா.7 ஆனவர் வாதியின் கணவருடன் பிறந்த தம்பியாவார். அவர் வாதியின் திருமணத்திற்கு செல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்கையில், மேற்படி வா.சா.7 ன் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் நடைபெற்ற திருமணம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.16. வா.சா.8 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், வா.சா.8 வாதியின் தாயார் ஆவார். அவர் தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் தனது மகளுக்கு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஒருமுறை தான் திருமணம் ஜாதி சமய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், மேலும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு, பஞ்சவர்ணம் என்ற மனைவி உள்ளார் என்றும், மேற்படி பஞ்சவர்ணத்திற்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் இடையே உள்ள திருமணம் என்ன ஆனது என்பது தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.8 ன் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும், ஆரோக்கியம் என்பவருக்கும் இடையே மட்டும் தான் முறையாக திருமணம் நடைபெற்றது என்பது தெரியவருகிறது. எனவே வா.சா.8 ன் சாட்சியத்தின் மூலம் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.17. மேலும் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.9 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் வாதியின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். அவர் தனது குறுக்குவிசாரணையில் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனது சகோதரியான வாதி கூறிதான் தனக்கு தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே

வா.சா.9 ன் முதல்விசாரணை சாட்சியம் நம்பத்தகுந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.18. அடுத்ததாக, வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.10 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர் வாதியின் மகன் ஆவார். அவர் வாதிக்கு அக்கறையுள்ள தரப்பினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வாய்ப்புள்ளது என்பதால் அவரது சாட்சியத்தின் அடிப்படையில் வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்பட்டது என முடிவுக்கு வரமுடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் , திருமணம் நடைபெறும்போது ஊர்காசு வசூலிப்பது வழக்கம் என்பது தெரியவருகிறது. ஆனால் வாதிக்கும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றதை பொருத்து ஊர்காசு வசூலிக்கப்பட்டு பதிவேட்டில் எழுதப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

10.19. மேற்படி வாதிதரப்பு 1 முதல் 10 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட தனிப்பட்ட சாட்சிகள் உறுதிபட சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் வாதியின் நெருங்கிய உறவினரான வாதியின் தாயார் மற்றும் மகன் உள்ளிட்டவர்கள் அளித்துள்ள சாட்சியம் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது என்பதால் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சியங்கள் மூலம் வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது வாதிகள் தரப்பு சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10.20 மேலும் வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி வாதி தரப்பு சாட்சியங்களில் திருமணத்தின்போது ஊர்காசு வசூலிக்கப்பட்டு பதிவேட்டில் எழுதப்படும் வழக்கம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வாதி மற்றும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு 1998 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது என்பதை காட்டும் வகையில் ஊர்காசு பெறப்பட்டு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.

10.21. மேலும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, வா.சா.ஆ.4, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் வாதிக்கு வழங்கப்பட்ட தனி நபர் வேலைக்கான இலவச அட்டை அசல், வா.சா.ஆ.5, வாதியின் மகன் பிரபாகரன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல், வா.சா.ஆ.6, ஊனமுற்றோர் மறுவாழ்வு துரை மூலம் வாதியின் மகன் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை அசல், வா.சா.ஆ.7, வாதியின் மகன் பிரபாகரனுக்கு உரிய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண்.139301000015651 க்கான பாஸ்புத்தம், வா.சா.ஆ.18, வாதியின் பெயரில் உள்ள ஆதார் அடையாள அட்டை நகல், வா.சா.ஆ.13, வாதியின் கணவர் பெயரில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உறுப்பினர் அடையாள அட்டை அசல், வா.சா.ஆ.14, வாதியின் கணவர் பெயரில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அசல், வா.சா.ஆ.15, வாதியின் கணவர் பெயரில் உள்ள ஆதார் அடையா அட்டை அசல், வா.சா.ஆ.16 வாதியின் கணவர் பெயரில் உள்ள குடும்ப அட்டை நகல், வா.சா.ஆ.17, வாதியின் பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகிய ஆவணங்களிலிருந்து வாதிக்கும் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாருக்கும் இடையே திருமணம் நடைபெற்றது என்பது நிரூபணம் செய்யப்பட்டதாக கருதமுடியுமா? என்பதைப் பொறுத்து பரிசீலனை செய்கையில், இதுசம்பந்தமாக, *Kamakshi /Vs/ Minor Ramalingam alias Munusami and another, reported in* 1993 (2) MLJ 17 என்ற முன்வழக்கின் தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*9. So, from the very evidence of PWs 1 and 2, it can be safely concluded that the factum of the alleged marriage between Singarammal and the 1st defendant cannot be said to have been established by the plaintiff, and the finding of the trial court in this regard, is correct. Further, the above said Ex.A2, birth extract of the plaintiff cannot also be relied on to prove the parentage of the plaintiff, or in other words, to prove the factum of marriage between the 1st defendant and Singarammal. It has also been held so in Nagayasami Naidu /Vs/ Kochadai Naidu, 81 LW 436: AIR 1969 Mad. 329 (D.B.), while dealing with the scope of Sec.35 of the Evidence Act, Rajambal /Vs./ Veermuthu Udayar, 99 LW 175 (DB), has also held likewise. It relied on an earlier decision in Nagayasami Naidu /Vs/ Kochadai Naidu, 81 LW 436: AIR 1969 Mad. 329 (D.B.),which observed: "Under Sec.35 of the Evidence Act (1 of 1872), it is only the entry made by a public servant in the discharge of his official duties that is admissible as a relevant fact. Other particulars not strictly covered by the entries are not admissible under Sec.35 of the Evidence Act."*

10.22. எனவே, மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில், ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கும் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாருக்கும் இடையே திருமணம் நடைபெற்றதாக நிரூபணம் செய்யப்பட்டதாக கருதமுடியாது.

10.23. மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.28 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் வாதி மற்றும் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர் என்பது நிரூபணம் செய்யப்பட்டதாக கருத முடியுமா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில் மேற்படி ஆவணங்களை பொருத்து வாதி தரப்பில் எவ்வித வாதுரையும் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி ஆவணங்களானது வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக வாதியின் மகனான வா.சா.10 ன் சாட்சியத்தின் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.24. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் இடையே திருமணம் நடைபெற்றது என்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் வாதி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முன் தீர்ப்புகள் இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்திவருவதாக இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

10.25 மேலும் வாதிக்கும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் திருமணம் நடைபெற்றதாக கருத்தில் கொண்டாலும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், பஞ்சவர்ணத்திற்கும் இடையேயான திருமணமானது பஞ்சவர்ணம் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதன் காரணத்தினால் பஞ்சவர்ணம் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டார் என்பது வாதி தரப்பில் முறைப்படி நிரூபிக்கப்படவில்லை என்பதால் வாதியின் முதல் கணவர் வாதி, கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரை திருமணம் செய்துகொள்வதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்பதும் நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், வாதி இறந்துபோன கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் சட்டப்படியான மனைவி ஆகமாட்டார் என இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வெழுவினா.3 க்கு விடையளிக்கப்படுகிறது.

10.26. **<u>எழுவினா.4 க்கான தீர்வு</u>**

முந்தைய எழுவினாக்களில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் மனைவி என்ற அந்தஸ்த்தை இழந்துவிட்டார் என்பது நிரூபிக்கப்படாத நிலையில் கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் முதல் மனைவி பஞ்சவர்ணம் அவருக்கு வாரிசு ஆவார். எனவே மேற்படி பஞ்சவர்ணம் என்பவர் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். எனவே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் பஞ்சவர்ணத்தை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

10.27. மேலும் வழக்குரை 4 வது தபசில் சொத்து கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் தந்தை சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், அவர் இறந்ததற்கு பின்னிட்டு மேற்படி சுப்பையா நாடாரின் இரண்டு மகள்கள் தங்களுக்குரிய பாகத்தை கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வாய்மொழி பாக விடுதலை என்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மேலும் வாய்மொழி பாக விடுதலையை நிரூபிக்கும் பொருட்டு மேற்படி சுப்பையா நாடாரின் மகள்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் மேற்படி சுப்பையா நாடாரின் மகள்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படாமல் அவரின் ஆண் வாரிசுகளான கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் மட்டுமே வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே 4 வது தபசில் சொத்தை பொருத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

10.28. எனவே மேற்கண்ட பரசீலனையிலிருந்து இந்த வழக்கானது பஞ்சவர்ணத்தை தரப்பினராக சேர்க்காத காரணத்தாலும், கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாரின் தந்தை சுப்பையா நாடாரின் பெண் வாரிசுகளை தரப்பினர்களாக சேக்காததாலும் வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இவ்வெழுவினாவிற்கு விடையளிக்கப்படுகிறது.

10.29. **எழுவினா.5 க்கான தீர்வு**

வாதி தரப்பில் 1வது தபசில் சொத்து கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டும் வகையில் வா.சா.ஆ.8 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 வது தபசில் சொத்து கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும், 4 ம்

பிரதிவாதிக்கும் 01.02.1999 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்பதை காட்டும் வகையில் வா.சா.ஆ.9 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 வது தபசில் சொத்தில் 1, 3, 4, 5 அயிட்ட சொத்துக்கள் மேற்படி கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடாருக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை காட்டும் வகையில் வா.சா.ஆ.10, 23.04.1983 ஆம் தேதிய கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4 வது தபசில் சொத்து கோபால் என்ற கோபால கிருஷ்ண நாடார் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான சுப்பையா நாடாருக்கு 13.11.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்பதை காட்டும் வகையில் வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10.30. எனவே 1வது தபசில் சொத்து வாதியின் கணவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் வாதிக்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் பாதி பங்கு உரிமையுள்ளது என்றும், 2 வது தபசில் சொத்து வாதியின் கணவருக்கும் 4 ஆம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்பதால் வாதியின் கணவர் இறந்த பிறகு வாதி, 1 பிரதிவாதி, 4 ம் பிரதிவாதி 2 வது தபசில் சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றும், மேற்படி 2 வது தபசில் சொத்தில் வாதிக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் தலா 1/4 பங்கும், 4 ம் பிரதிவாதிக்கு பாதி பங்கும் உரிமையுள்ளது என்றும், மேலும் 3 வது தபசில் சொத்து வாதியின் கணவர் மற்றும் அவரது சகோதரர்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வாதியின் கணவர் இறந்த பிறகு வாதியும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றும், மேற்படி 3 வது தபசில் சொத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/8 பங்கு உரிமையுள்ளது என்றும், 4 வது தபசில் சொத்து வாதியின் கணவரின் தந்தை சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு குடும்ப ஏற்பாட்டின் படி சுப்பையா நாடாரின் 2 மகள்களும் தங்களுக்குரிய பாகத்தை வாதியின் கணவருக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் என்றும், தபசில் சொத்துக்களில் தற்போது வாதியின் கணவர் இறந்ததற்கு

பின்னிட்டு வாதியும், பிரதிவாதிகளும் தபசில் சொத்தில் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், எனவே மேற்படி 4 வது தபசில் சொத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தலா 1/8 பங்கு பாகம் உரிமையுள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

10.31. இதுசம்மந்தமாக பரிசீலனை செய்கையில் முந்தைய எழுவினாக்களில் இவ்வழக்கின் வாதி கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாரின் சட்டப்படியான மனைவி கிடையாது என்று தீர்மானித்துள்ள நிலையில் இந்துவாரிசுரிமை சட்டத்தின்படி வாதி, கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாரின் வாரிசாகமாட்டார். எனவே வாதியால் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாரின் மனைவி என்ற முறையில் தபசில் சொத்தில் பாகம் கோரப்பட்டுள்ள நிலையில் வாதி மேற்படியாரின் சட்டப்படியான மனைவி அல்ல என்பதால் அவர் கோபால் என்ற கோபாலகிருஷ்ணனின் வாரிசு கிடையாது என்பதால் வாதிக்கு தபசில் சொத்துக்களில் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என இவ்வெழுவினா.5 க்கு விடையளிக்கப்படுகிறது.

10.32. <u>எழுவினா.6 க்கான தீர்வு</u>

பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டு 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதா? என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், எதிர்கோரிக்கைதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தபசில் சொத்தானது சுப்பையா நாடாரின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே பூர்வீக சொத்துக்களை பொருத்து சுப்பையா நாடாரின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமையுள்ளது. மேலும் சுப்பையா நாடாரின் வாரிசுகளான கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடாருக்கும் அவரது மனைவியான பஞ்சவர்ணத்திற்கும் உள்ள திருமண உறவு நடைமுறையில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி பஞ்சவர்ணம் 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மேலும் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு

சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், சுப்பையா நாடாருக்கு கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் நாடார் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் தவிர பெண் வாரிசுகளும் உள்ளனர் என்பதும் தெரியவருகிறது. எனவே மேற்படி பெண் வாரிசுகளுக்கும் தபசில் சொத்துக்களில் உரிமையுள்ளது. ஆனால் மேற்படி சுப்பையா நாடாரின் பெண் வாரிசுகள் பி.வா.சா.ஆ.1, 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. எனவே பூர்வீக சொத்துக்களில் உரிமையுள்ள நபர்கள் அனைவரும் தரப்பினர்களாக சேர்க்கப்படாமல் பிரதிவாதிகள்/எதிர்கோரிக்கைதாரர்களுக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட பி.வா.சா.ஆ.1, 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வெழுவினா.6 க்கு விடையளிக்கப்படுகிறது.

10.33. <u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 7 முதல் 9 க்கான தீர்வு</u>

முந்தைய எழுவினாக்களில் பி.வா.சா.ஆ.1, 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்பதாக தீர்வு கண்டுள்ள நிலையில் மேற்படி 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் எதிர்கோரிக்கை தபசில் சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்பதும், அதன் அடிப்படையில் மேற்படி சொத்தில் உரிமை ஏற்பட்டுள்ளது என்பதும் ஏற்கத்தக்கதல்ல. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து எதிர்கோரிக்கை தபசில் சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிர்கோரிக்கை தபசில் சொத்தை பொருத்து 1 ஆம் பிரதிவாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து அவ்வாறே இவ்வெழுவினா.7 மற்றும் 8 க்கு விடையளிக்கப்படுகிறது.

10.34. மேலும் பி.வா.சா.ஆ.1, 13.10.2014 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று தீர்வு காணப்பட்டுள்ளதன் அடிப்படையில் தபசில் சொத்துக்கள் பிரதிவாதிகள்/எதிர்கோரிக்கைதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றும், அதன்

அடிப்படையில் அவர்கள் தபசில் சொத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே தபசில் சொத்துக்களை பொருத்து எதிர்கோரிக்கைதாரர்கள்/பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதை வாதி இடையூறு செய்யக்கூடாது என பிரதிவாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எதிர்கோரிக்கைதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வெழுவினா 9 க்கு விடையளிக்கப்படுகிறது.

11. **திருத்தியமைக்கப்பட்ட எழுவினா .10 க்கான தீர்வு**

வாதி மற்றும் பிரதிவாதிகள்/எதிர்கோரிக்கைதாரர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என மேலே கண்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்களில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், செலவுத்தொகை உட்பட வேறு இதர பரிகாரங்கள் எதுவும் வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் வழங்கத் தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே திருத்தியமைக்கப்பட்ட இவ்வெழுவினாவுக்கு தீர்வு காணப்படுகிறது.

12. **இறுதியாக,** வாதியின் வழக்கு மற்றும் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை பாத்தியம் தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 24-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.24 20:19:29 -0600

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**1. வாதி தரப்பு சாட்சிகள்:**

1. திருமதி. முத்தம்மாள் ( வாதி)
2. திரு.ரவீந்திரன்
3. திரு.குட்டிராஜா
4. திரு.மாரியப்பன்
5. திருமதி.ஆவுடைக்கோமதி
6. திரு.சாமிக்காளை
7. திரு.சந்தியாகப்பன்
8. திருமதி.பாப்பம்மாள்
9. திருமதி.செல்வி
10. திரு.இசக்கிராஜ்

**2. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:**

1. திரு. காசிநாடார் (3 ஆம் பிரதிவாதி)

**3. வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.04.2018 | 1 முதல் 3 பிரதிவாதிகள் மாரிக்கனி என்பவருக்கு எழுதிக்கொடுத் கிரையம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.2 | 24.10.2018 | 1ம் பிரதிவாதி, முத்துசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.3 | 25.02.2021 | 1ம் பிரதிவாதி செல்வகோமதிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.4 | ---- | மகாத்மா காந்தி தேதிசய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் வாதிக்கு வழங்கப்பட்ட தனிநபர் வேலைக்கான இலவச அட்டை அசல் |
| வா.சா.ஆ.5 | --- | வாதியின் மகன் பிரபாகரன் என்பவரின் ஆதார் அடையாள அடடை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| வா.சா.ஆ.6 | --- | ஊனமுற்றோர் மறுவாழ்வு துறை மூலம் வாதியின் மகன் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட ஊனமுற்றோருக்கான தேசிய அடமான அட்டை அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | ---- | வாதியின் மகன் பிரபாகரனுக்கு உரிய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண்.13930100015651 க்கான பாஸ்புத்தகம் அசல் |
| வா.சா.ஆ.8 | ---- | பிராது 1ம் தபசில் சொத்திற்கு வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ணன் நாடார் பெயரில் உள்ள பட்டா, பட்டா எண்.758 கணினி நகல் |
| வா.சா.ஆ.9 | 01.02.1999 | சங்கரபாண்டியன் என்பவர் தனக்காகவும், தன் மக்கள் மைனர்கள் இந்திரா ப்ரியதர்ஷினி, ஜென்சி, திருவினஞ்சி குமரன், ஜெரோம் ஆகியோர்களுக்கு கார்டியன் நிலையில் வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ணன் நாடார், ராமசாமி நாடார் ஆகியோர்களுக்கு பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.10 | 23.04.1983 | சங்கரபாண்டியன், கண்ணன் ஆகியோர் வாதியின் கணவர் கோபால் என்ற கோபால கிருஷ்ணன் நாடார், வைத்திலிங்க நாடார், காசி நாடார், ராமசாமி நாடார் ஆகியோர்களுக்கு பிராது 3ம் தபசில் 1, 3, 4 மற்றும் 5ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.11 | 13.11.1975 | பழனிச்சாமி நாடார் மேற்படியார் மகன் சுப்பையா நாடார் ஆகியோர் வாதியின் கணவரின் தகப்பனார் சுப்பையா நாடாருக்கு பிராது 4ம் தபசில் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொருத்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.12 | 13.11.1975 | கோபால் நாடார் என்பவர் வாதியின் கணவரின் தகப்பனார் சுப்பையா நாடாருக்கு 4வது தபசில் 5வது அயிட்ட சொத்தைப் பொருத்து எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் நகல் |
| வா.சா.ஆ.13 | ---- | வாதியின் கணவர் பெயரில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உறுப்பினர் அடையாள அட்டை அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.14 | ---- | வாதியின் கணவர் பெயரில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அசல் |
| வா.சா.ஆ.15 | --- | வாதியின் கணவர் பெயரில் உள்ள ஆதார் அடையாள அட்டை அசல் |
| வா.சா.ஆ.16 | ---- | வாதியின் கணவர் பெயரில் உள்ள குடும்ப அட்டை நகல் |
| வா.சா.ஆ.17 | ---- | வாதியின் பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.18 | ---- | வாதியின் பெயரில் உள்ள ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.19 | ---- | வாதியின் கணவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.20 | 18.11.2014 | வாதி, பிரதிவாதிகளுக்கு தன் வழக்கறிஞர் மூலம் பதிவு தபாலில் அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ரசீதுடன் கூடியது |
| வா.சா.ஆ.21 | --- | வாதி அனுப்பிய அறிவிப்பை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் .3 எண்ணிக்கை |
| வா.சா.ஆ.22 | --- | வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு வாதியின் வழக்கறிஞரிடம் திருப்பி அனுப்பப்பட்ட பதிவு தபால் |
| வா.சா.ஆ.23 | ---- | திருமலாபுரம் கிராமத்தை சேர்ந்த ஜி.அந்தோணிச்சாமி என்ற சிவனையா என்பவரின் மகள்.ஏ.பிரியா என்பவரின் திருமண அழைப்பிதழ் ( வாதிக்கு வழங்கப்பட்டது) |
| வா.சா.ஆ.24 | --- | ஜி.ராஜ் நாடார் மகன் குருசாமி என்ற மாரிச்செல்வம் என்பவரின் திருமண அழைப்பிதழ் (வாதிக்கு வழங்கப்பட்டது) |
| வா.சா.ஆ.25 | ---- | ஜி.குட்டிநாடார் மகன் வசந்தி என்பவரின் திருமண அழைப்பிதழ் (வாதிக்கு வழங்கப்பட்டது) |
| வா.சா.ஆ.26 | ---- | கே.முனிராஜ் மகள் மாரிச்செல்வியின் திருமண அழைப்பிதழ் (வாதிக்கு வழங்கப்பட்டது) |
| வா.சா.ஆ.27 | ---- | வி.நடராஜன் மகன் செந்தில் குமார் என்பவரின் திருமண அழைப்பிதழ் (வாதிக்கு வழங்கப்பட்டது) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.28 | ---- | ஜி.குட்டி நாடார் மகள் சங்கீதா என்பவரின் திருமண அழைப்பிதழ் (வாதிக்கு வழங்கப்பட்டது) |
| வா.சா.ஆ.29 | ---- | வாதியும் அவர் கணவர் கோபால் என்ற கோபாலகிருஷ்ண நாடாரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோ-2 |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 13.10.2014 | ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் நகல் |
| பி.வா.சா.ஆ.2 | --- | வீட்டுவரி ரசீது |
| பி.வா.சா.ஆ.3 | --- | மின்கட்டண ரசீது |
| பி.வா.சா.ஆ.4 | ---- | பிராது தபசில் சொத்திற்குரிய பட்டா -14 எண்ணம் |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.24 20:19:15 -0600

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.104/2015**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 24.06.2026**